JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//61/2020

: Prosecution P.W - 4

NAME : Dr. மூர்த்திராஜ்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.12.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாளையங்கோட்டை மத்தியசிறை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 16.02.2016 ம் தேதி இரவு 8.40 மணிக்கு நான் தென்காசி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது பாவூர்சத்திரம் சடையபப்புரம் மெயின் ரோட்டை சேர்ந்த திருமலைவேலி என்பவரது மனைவி மாடத்தி வயது 40 என்பவர் தானாகவே என்னிடம் சிகிச்சைக்கு ஆஜரானார். அவரை நான் விசாரித்த போது அவர் தன்னை 16.02.2016 ம் தேதி மாலை 5.00 மணிக்கு தனது வீட்டின் அருகே வைத்து அடையாளம் தெரிந்த 3 நபர்கள் அரிவாளால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்து பார்த்த போது சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு காயங்கள்

1. வலது முன்னங்கையின் நடுப்பகுதியில் வலியும்,அதனோடு சேர்ந்த வீக்கமும் காணப்பட்டது. மேற்படி காயத்திற்கு தக்க முதலுதவி சிகிச்சை அளித்து மேற்படி மாடத்தி என்பவரை பெண்கள் அறுவை சிகிச்சை

பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு வலது முன்னங்கையில் எக்ஸ்ரே எடுத்ததில் எந்த விதமான எலும்பு முறிவும் காணப்படவில்லை. அதற்கான எக்ஸ்ரே எண் A225 நாள் 18.02.2016 ஆகும். மேற்படி மாடத்தி என்பவர் 21.02.2016 ம் தேதி தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என அவிப்பிராயம் தெரிவித்து சான்று வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படம் சான்று தான் நான் வழங்கிய காயச்சான்று ஆகும். மேற்படி காயச்சான்று அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__

நான் கருத்துரை வழங்குவதற்கு முன்பு இந்த வழக்கில் உபயோகபடுத்தபட்டதாக சொல்லப்படும் ஆயுதங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக அரிவாளால் வெட்டபட்டால் வீக்க காயம் வராது என்றால் சரிதான். நான் சொன்ன வீக்க காயத்தின் அளவு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக வீக்க காயத்தில் காயத்தின் நிறத்தை பொறுத்து தான் காயம் எப்போது ஏற்பட்டது என கணிக்க முடியும் என்றால் சரிதான். இந்த காயத்தில் நிறம் குறிப்பிடபடாததால் எப்போது ஏற்பட்டது என சொல்ல முடியாது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கலர் சொல்லபடாததால் அவருக்கு ஏற்பட்ட காயம், காயம் ஏற்பட்டதாக சொன்ன நாளிலிருந்து ஒரு நாளைக்கு முன்பு கூட ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து தகவல் எத்தனை மணிக்கு யாரால் பெறபட்டது என்று என்னுடைய ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi